# ஜூலை 2017 மாதத்திற்கான பூச்சிநோய் கண்காணிப்பு

## நெற்பயிர்

நெற்பயிரில் இலைச்சுருட்டு புழு மற்றும் தண்டு துளைப்பான் தாக்குதல் தர்மபுரி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவள்ளுர், ஈரோடு, கடலூர், திருச்சி மற்றும் சேலம் மாவட்டங்களில் பரவலாகக் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விளக்குப் பொறிகளை அமைத்து அந்திப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தலாம்.

பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீத கரைசலை தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

மேலும் நாற்றங்கால் மற்றும் நடுவு செய்த வயல்களில் இலைப்பேனை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீத கரைசலை தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு கீழ்கண்ட மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும்.

- பியுப்ரோபெசின் 25 SC @ 200 மில்லி அல்லது
- தையோமீதாக்சம் 20 WDG 100 மில்லி அல்லது
- டைமீத்தோட் 30 EC 400 மில்லி

## நிலக்கடலை

விருத்தாசலம் மாவட்ட விவசாயிகள் நிலக்கடலைப் பயிரில் சிகப்பு கம்பிளி அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறிகளை வைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் டைகுளோவாஸ் 70 டபுல்யு.எஸ்.சி 250 மில்லி ஒரு ஏக்கருக்கு அல்லது பாசலோன் 35 EC 300 மில்லி ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும்.

சேலம் மற்றும் தர்மபுரி மாவட்ட விவசாயிகள் டிக்கா இலைப் புள்ளி நோயைக் கட்டுப்படுத்த கார்பன்டாசிம் 0.1 சதம் தெளிக்கவும்.

## பருத்தி

சேலம், தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் பருத்தியில் ஒரு சில இடங்களில் வெள்ளை ஈ தாக்குதல் காணப்படுகிறது.

மக்காச்சோளத்தை பருத்தி வயலை சுற்றி பயிரிடும்பொழுது சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கு தடுப்புப் பயிராக அமைகிறது. வயல் வரப்புகளில் தட்டைப் பயிரை ஓரப்பயிராகப் பயிரிட்டு நன்மை செய்யும் பொறி வண்டு கிரைசோபிட் உள்ளிட்ட பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்து சாறு உறிஞ்சும் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

உதிர்ந்த சப்பைகள், பூக்கள் மற்றும் காய்கள் ஆகியவற்றை கையால் பொறுக்கி அழிப்பதன் மூலம் பூச்சிகளின் பெருக்கத்தைக் குறைக்க முடியும். மஞ்சள் நிறம் பூசப்பட்ட தகர

டப்பாவின் மேல் ஆமணக்கு எண்ணெய் அல்லது கிரீஸ் தடவி ஏக்கருக்கு 10 என்ற விகிதத்தில் வைத்து வெள்ளை ஈ மற்றும் தத்துப் பூச்சியின் அந்து பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

**வெள்ளை ஈ மேலாண்மை**

- மாற்று ஒப்புப்பயிரான, பனியார துத்தியினை (*Abuticon indicum*) களை நீக்கம் செய்ய வேண்டும்.
- மஞ்சள் ஒட்டும் பொறி, ஒரு ஹெக்டருக்கு 12 நம்பர் என்ற அளவில் அமைக்க வேண்டும்.
- சரியான விகிதத்தில் தழைச்சத்து உரத்தினை இட வேண்டும்.
- வேப்பெண்ணைய் 3 % அல்லது மீன் எண்ணெய் ரோசின் சோப் 25 கிராம் / லிட்டர் அல்லது மீதைல் டிமிட்டான் 25 EC 2 மி.லி / லிட்டர் இவற்றுள் ஒன்றை வெள்ளை ஈயை கட்டுப்படுத்த தெளிக்க வேண்டும். வேப்பெண்ணெயை பயன்படுத்தும்போது டீபால் அல்லது சான் டோவிட் போன்ற ஒட்டும் பசையை பயன்படுத்த வேண்டும்.

கீழ்கண்ட பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும்.

- டிரைசுசோபாஸ் 3 மில்லி / 1லிட்டர் தண்ணீர்
- இமிடாக்ளோபிரிட் 6 மில்லி / 10 லிட்டர் தண்ணீர்

**இலைப்பேன் மேலாண்மை முறைகள்**

- இமிடாக்ளோபிரிட் 70 WS என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை, ஒரு கிலோவிற்கு 7 கி என்ற அளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.
- முதல் 8 வாரத்திற்கு அசுவிணி, தத்துப்பூச்சி மற்றும் இலைப்பேன் போன்றவற்றில் இருந்து பயிர்களை காக்க வேண்டும்.
- இமிடாக்ளோபிரிட் 17.8 SL 100 மி.லி / ஹெக்டர் அல்லது தையோமீதாக்கான் 25 WG @ 100 கிராம் /ஹெக்டர் அல்லது புரோபனோபாஸ் @ 1 லிட்டர் / ஹெக்டர் அல்லது ஃபிப்ரோனில் 5 SC @ 1.5 லிட்டர் / ஹெக்டர், இவற்றுள் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லி மருந்தினை பயன்படுத்தி இலைப்பேனை கட்டுப்படுத்தலாம்.

**மரவள்ளியில் தேமல் நோயை கட்டுப்படுத்ததுதல்**

**ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் - வெள்ளை ஈ காரணி**

- மரவள்ளியில் தேமல் நோய் வெள்ளை ஈ மூலம் பரவுகிறது. அதை கட்டுப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் கீழ்கண்டவாறு.
- மாற்று ஒப்புப்பயிரான, பனியார துத்தியினை (*Abuticon indicum*) களை நீக்கம் செய்ய வேண்டும்.

- மஞ்சள் ஒட்டும் பொறி, ஒரு ஹெக்டருக்கு 12 நம்பர் என்ற அளவில் அமைக்க வேண்டும்.
- சரியான விகிதத்தில் தழைச்சத்து உரத்தினை இட வேண்டும்.
- அதிகப்படியான நீர்பாசனத்தை தடுக்க வேண்டும்.
- வேப்பெண்ணைய் 3 % அல்லது மீன் எண்ணெய் ரோசின் சோப் 25 கிராம் / லிட்டர் அல்லது மீதைல் டிமிட்டான் 25 EC 2 மி.லி / லிட்டர் இவற்றுள் ஒன்றை வெள்ளை ஈயை கட்டுப்படுத்த தெளிக்க வேண்டும். வேப்பெண்ணெயை பயன்படுத்தும்போது டீபால் அல்லது சான் டோவிட் போன்ற ஒட்டும் பசையை பயன்படுத்த வேண்டும்.
- மீதைல் டிமிடான் இளம் பருவத்திலும், பேசலோனை பின் பருவத்திலும் தெளிக்க வேண்டும்.
- செயற்கை பைரித்ராய்ட் உபயோகத்தை தவிர்க்க வேண்டும்.
- மரவள்ளி, தன் வளர்ச்சிப் பருவத்தைத் தாண்டி வளர்வதைத் தடுக்க வேண்டும்.

**மக்காச்சோளம்**

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்ட விவசாயிகள் அடிச்சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த மெட்டலாக்சில் மற்றும் மேன்கோசெப் மருந்து 2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

**வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் மேலாண்மை**

பருவமழை மேலும் தாமாதமானால் வறட்சி தொடர வாய்ப்புள்ளது. அவ்வாறான சூழ்நிலையில் சாறு உறுஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், வெள்ளை ஈ, சுருள் வெள்ளை ஈ மற்றும் பலவகையான மாவுப்பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாக வாய்ப்புள்ளது.

இவற்றை மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து (5 பொறி, ஏக்கருக்கு) கண்காணிக்கவும். தேவைப்படின் வேப்பங்கொட்டைச்சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணைய் சோப் 1 கிலோ 40 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.

**தகவல்**

இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை – 3.